# ஒன்றிய அரசு - தனியார் அமைப்புகள் வெளியிடும் மாநில வளர்ச்சி புள்ளி விவரங்களில் தமிழ்நாடுதான் முன்னிலை!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...

முதல் பக்கத் தொடர்ச்சி

2021-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் என் மேல் நம்பிக்கை வைத்து, தமிழ்நாட்டு மக்கள் ஆட்சிப் பொறுப்பை வழங்கினார்கள்! மக்கள் என் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை நான் காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன்! இந்த மூன்றரை ஆண்டுகளில், ஏராளமான திட்டங்களை நிறைவேற்றி, தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக வளர்த்தெடுத்து வருகிறோம்! அது, ஊடகங்கள் வெளியிடும் புள்ளி விவரங்களாக இருந்தாலும் சரி - தனியார் அமைப்புகள் வெளியிடும் சர்வேக்களாக இருந்தாலும் சரி - ஏன், ஒன்றிய அரசே வெளியிடும் புள்ளி விவரங்களாக இருந்தாலும் சரி - அதில் அனைத்திலும் தமிழ்நாடுதான் முன்னணியில் இருக்கிறது!

- இந்தியாவின் மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலங்களின் பட்டியலில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது!
- தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு, உயர்ந்திருக்கிறது.
- 2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்று ஒரு மிகப் பெரிய குறிக்கோளை வைத்து, நாள்தோறும் உழைத்துக் கொண்டிருக்கிறோம்!
- பொருளாதாரக் குறியீடுகள் அனைத்திலும், தமிழ்நாடு வளர்ச்சியை எட்டி இருக்கிறது.
- வறுமை இல்லாத மாநிலமாக - பட்டினிச் சாவுகள் அறவே இல்லாத மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது.
- கடந்த மூன்று ஆண்டுகளில், 10 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தனியார் முதலீட்டுத் திட்டங்கள் வருவது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.
- இந்த வளர்ச்சியுடன் ஒவ்வொரு தனிமனிதருக்கும் நன்மை அளிக்கும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்! முத்தாய்ப்பான சில திட்டங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்!
- மாதம் ஆயிரம் ரூபாய் என்று, ஒரு ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாயை ஒரு கோடியே 16 லட்சம் பெண்களுக்கு, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் கொடுக்கிறோம்! அதே போன்று, 'புதுமைப்பெண்' திட்டத்திலும் - 'தமிழ்ப்புதல்வன்' திட்டத்திலும், ஆண்டொன்றுக்கு 12 ஆயிரம் ரூபாய் வழங்குகிறோம்! பெண் விடுதலைக்கு அச்சாரமாக, வேலை வாய்ப்புகளை உருவாக்கி, அவர்கள் இலவசமாகப் பயணம் செய்ய, "விடியல் பயணத் திட்டம்" - பாதுகாப்பாக வெளியூர்களில் தங்க, "தோழி விடுதித் திட்டம்" என்று செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்!

## தமிழ்நாட்டில் நாம் செய்து வரும் வளர்ச்சிப் பணிகளை எந்தக் கொம்பனாலும் தடுக்க முடியாது!

**அதிகளவில் பெண்கள் வேலைக்குச் செல்லும் மாநிலம் தமிழ்நாடு!**

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், அமைதியான - பாதுகாப்பான மாநிலமாக இருப்பதால், அதிகளவில் பெண்கள் வேலைக்குச் செல்லும் மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு இருக்கிறது!

அடுத்து, வருங்காலத் தலைமுறை வலிமையான தலைமுறையாக வளர, சத்தான - சுவையான காலை உணவைக் கொடுக்கிறோம்! தமிழ்நாட்டு மாணவர்கள் என்றால், உடனே வேலை கொடுக்கும் அளவிற்கு, நம்முடைய மாணவர்களின் திறமையை மேம்படுத்த, 'நான் முதல்வன்' திட்டத்தில் திறன் பயிற்சி கொடுக்கிறோம்!

- **ஒன்றிய அரசு வெளியிட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் தமிழ்நாட்டின் பல்வேறு திட்டங்கள் பாராட்டப்பட்டிருக்கிறது. அனைத்துத் துறைகளிலும், மேல் நோக்கிய வளர்ச்சியைத் தமிழ்நாடு அடைந்து வருகிறது.**

இத்தகைய சூழலில் தமிழ்நாடு அரசுக்கு ஒத்துழைக்கும் ஒன்றிய அரசு மட்டும் இருந்திருந்தால் தமிழ்நாடு இன்னும் வேகமாக வளர்ந்திருக்க முடியும்.

தமிழ்நாட்டு மக்களான நீங்கள் முழுமையான வெற்றியை 'இந்தியா' கூட்டணிக்குக் கொடுத்ததைப் போன்று, சில மாநிலங்களில் பெற முடியாததால், சிறிய வித்தியாசத்தில் மீண்டும் ஒன்றியத்தில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியே அமைந்துவிட்டது. மூச்சுக்கு மூச்சு 400 சீட் வெற்றி பெறுவோம் என்று அவர்கள் சொல்லி வந்திருந்தாலும், இறுதியில் 240 இடங்கள்தான் அவர்களுக்குக் கிடைத்தது. இறுதியில், கூட்டணிக் கட்சிகள் தயவோடு ஒரு மைனாரிட்டி அரசைத்தான் அமைக்க முடிந்தது.

**மக்களுக்குத் திட்டங்களைத் தந்து வளரும் எண்ணமே பா.ஜ.க.விற்கு வராது!**

ஆனாலும், பா.ஜ.க. அரசு தன்னுடைய பாசிச - சர்வாதிகார - எதேச்சாதிகாரத் தன்மையை விட்டு இறங்காமல் - பழையபடியே நடந்து கொள்வதைத்தான் பார்க்கிறோம்.

மதவாத அரசியலை நடத்தி - மக்களை ஒரு மயக்கத்தில் வைத்து - அரசியல்ரீதியாக லாபம் அடையலாம் என்று நினைக்கிறார்களே தவிர, மக்களுக்கு நல்லது செய்து - மாநிலங்களுக்குத் திட்டங்களைத் தந்து வளர வேண்டும் என்ற நினைப்பே பா.ஜ.க.விற்கு வராது! மதவாத அரசியல் மூலமாக, மக்களிடம் இருந்து ஓட்டு அறுவடை செய்து, காலத்தை ஓட்ட நினைக்கிறார்கள்.

**திருக்குறளைக் கூறி ஏமாற்றிட நினைக்கும் ஒன்றிய நிதி அமைச்சர்!**

அதனால்தான், ஒன்றிய அரசின் சார்பில் ஆண்டுதோறும் வெளியிடப்படும் நிதிநிலை அறிக்கை, வெற்று அறிக்கையாக இருக்கிறது! ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களால், நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவிற்கே எதுவும் இல்லை. திருக்குறளை மேற்கோள் காட்டினால் போதும், தமிழ்நாட்டை ஏமாற்றிவிடலாம் என்று நினைக்கிறாரா நிதி அமைச்சர்? இப்போது புதிதாக தெலுங்குக் கவிதையையும் மேற்கோள் காட்டுகிறார். 'நாடு என்றால் வெறும் மண் அல்ல; அதன் மக்கள்தான்' என்பது அப்பாராவ் எழுதிய அந்தக் கவிதையின் பொருள். அந்த மக்களுக்காக என்ன அறிவித்தார்கள்? எதுவும் இல்லை!

தெலுங்கில் ஒரு பழமொழி சொல்வார்கள்... 'பேரு பெத்த பேரு... தாக நீலு லேது...' என்று சொல்வார்கள். "பெயர்தான் பெரிய பெயர் - ஆனால் குடிக்கத் தண்ணீர்கூட கொடுக்க மாட்டார்கள்" என்று அதற்கு அர்த்தம். அது போன்றுதான், பெயர் என்னவோ ஒன்றிய பட்ஜெட் - இந்தியாவிற்கான பட்ஜெட் - வளர்ச்சி பட்ஜெட்! ஆனால், அது எதுவும் அதில் இருக்காது.

**அனைத்துத் தரப்பினரையும் ஏமாற்றும் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை!**

அனைத்துப் பகுதிக்குமான வளர்ச்சியை உறுதி செய்திருப்பதாகப் பிரதமரும் - நிதி அமைச்சரும் சொல்கிறார்கள். அனைத்துப் பகுதியின் பெயரும் இந்த பட்ஜெட்டில் இடம் பெற்றிருக்கிறதா? என்று கொஞ்சமாவது மனச்சாட்சியுடன் பதில் சொல்லுங்கள். ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை என்பது அனைத்துத் தரப்பினரையும் ஏமாற்றும் வகையில் அமைந்திருக்கிறது.

- **உழவர்கள் நான்கு ஆண்டுகளாகப் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களின் முக்கியக் கோரிக்கையான குறைந்தபட்ச ஆதார விலைக்கான அறிவிப்பு இதில் இல்லை.**
- **கல்விக்கு மொத்தமே 2.3 விழுக்காடுதான் ஒதுக்கி இருக்கிறார்கள்.**
- **சுகாதாரத்துக்கு மொத்தமே 1.8 விழுக்காடுதான் ஒதுக்கி இருக்கிறார்கள்.**
- **பாதுகாப்புத் துறைக்கு 4.91 லட்சம் கோடி ரூபாயும், உள்துறைக்கு 2.33 லட்சம் கோடி ரூபாயும் கொடுத்தவர்கள் - சமூகநலத் துறைக்கு 60 ஆயிரம் கோடி ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். மக்கள் வளர்ச்சியில் இவர்களுக்கு எந்த அக்கறையும் இல்லை என்பதற்கு இதை விட வேறு சாட்சி வேண்டுமா?**
- **பட்டியல் - பழங்குடியினருக்கான நிதி ஒதுக்கீடும் குறைவு.**
- **புதிய வேலை வாய்ப்புக்கான திட்டங்கள் இல்லை.**

**எல்.ஐ.சி.யை ஒழிக்க முயற்சி!**

- **காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டை 100 விழுக்காடு அதிகப்படுத்தியது மூலமாக எல்.ஐ.சி.யை ஒழிக்க முயற்சி செய்கிறார்கள்.**
- **உர மானியத்தைக் குறைத்துவிட்டார்கள்.**
- **பெட்ரோலியப் பொருள்களுக்கான மானியத்தைக் குறைத்துவிட்டார்கள்.**
- **சமையல் எரிவாயு மானியத்தையும் குறைத்துவிட்டார்கள்.**
- **பொருளாதாரத்தை வளர்க்கும் திட்டங்கள் இல்லை.**
- **பொருளாதார ஏற்றத்தாழ்வைக் குறைக்கும் முயற்சிகள் இல்லை.**
- **நிதியைப் பெருக்கும் திட்டங்கள் இல்லை!**

இந்த நிதிநிலை அறிக்கையின் மிகப்பெரிய சலுகையாக அவர்கள் சொல்வது, 12 லட்சம் ரூபாய் ஆண்டு வருமானம் கொண்டவர்களுக்கு வருமான வரி இல்லை என்று சொல்லப்படுகிறது. இந்திய நாட்டின் மக்கள்தொகை 140 கோடி. அதில், 2 விழுக்காட்டுக்கும் குறைவான மக்களுக்கான சலுகைதான் அது! இதையே பெரிய சாதனையாகக் காட்டுகிறார்கள்.

அனைத்து மாநிலங்களுக்கான ஒன்றிய பட்ஜெட் என்று சொல்லிவிட்டு, பீகார் - பீகார் - பீகார் என்று ஆறு முறை சொல்கிறார் அமைச்சர் நிர்மலா சீதாராமன். ஏன் என்றால், அங்குதான் சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிறது. கடந்த முறை நிதிநிலை அறிக்கையில் ஆந்திரா - ஆந்திரா என்று அறிவித்தார்கள். அங்கு, சட்டமன்றத் தேர்தல் வந்ததால் அவ்வாறு சொன்னார்கள். இப்போது, பீகாரில் தேர்தல் வரப்போகிறது என்பதால், பீகார் - பீகார் என்று சொல்கிறார்கள். பீகாருக்கோ, ஆந்திராவிற்கோ திட்டங்கள் ஒதுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை! எங்களை ஏன் புறக்கணிக்கிறீர்கள்? என்றுதான் நாங்கள் கேட்கிறோம்.

- **தமிழ்நாட்டிற்கான புதிய சிறப்புத் திட்டம் உண்டா? இல்லை!**
- **தமிழ்நாட்டிற்கான புதிய ரயில்வே திட்டம் உண்டா? இல்லை!**
- **ரயில்வே திட்டங்களுக்கான நிதியாவது அதிகம் கொடுத்தார்களா? இல்லை!**
- **சென்னை மெட்ரோ இரண்டாம் கட்டப் பணிகளுக்கு நிதி உண்டா? இல்லை!**
- **'ஃபெஞ்சல்' புயலுக்கு இழப்பீடு உண்டா? கிடையாது!**
- **'மிக்ஜாம்' புயலுக்கு இழப்பீடு உண்டா? அதுவும் கிடையாது!**
- **மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நிதி உண்டா? கிடையவே கிடையாது!**
- **ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்திற்கு நிதி இருக்கிறதா? இல்லை!**
- **குடிநீர்த் திட்டத்திற்கும் இல்லை!**
- **வீடுகட்டும் திட்டத்திற்கும் இல்லை!**

எதை எடுத்தாலும்... இல்லை... இல்லை... இல்லை! இதற்குப் பெயர் பட்ஜெட்டா? இதற்குப் பெயர் பட்ஜெட்டா?

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களே... தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் நிதியமைச்சர் என்பது பெருமையா? இல்லை, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக நிதி ஒதுக்குவது பெருமையா? உங்களின் மனசாட்சிக்கே இந்த கேள்வியை விட்டுவிடுகிறேன்.

மாநிலங்களுக்கு நிதி தராத ஒன்றிய அரசு கடன் தருகிறது. அதுவும் வட்டி இல்லாத கடனாம். வடக்கில் நடப்பது ஆட்சியா? இல்லை, வட்டிக் கடையா? அப்பா தன் பிள்ளையின் படிப்புக்கு - உடைக்கு - உணவுக்கு பணம் தராமல், கடனாகத் தருகிறேன் என்று சொல்ல முடியுமா? அவ்வாறு கொடுத்தால் அதற்குப் பெயர் குடும்பமா? என்று கேட்போமா? மாட்டோமா? மாநிலங்களை ஒருங்கிணைத்து ஆட்சி செய்யும் ஒன்றிய அரசானது மாநிலங்களுக்கு நிதி வழங்காமல், கடன் தருகிறேன் என்று சொல்வதற்குப் பெயர், ஆட்சியா? இதுதான் கூட்டாட்சியா? இந்திய அரசியலமைப்புச் சட்டம் இப்படித்தான் சொல்கிறதா? சட்டப்படி ஆட்சி செய்கிறீர்களா? இல்லை, உங்கள் இஷ்டப்படி ஆட்சி செய்கிறீர்களா?

**பா.ஜ.க.விற்கு வாக்களிக்காத மக்கள் என - தமிழ்நாட்டுக்கு நிதி வழங்க மறுப்பு!**

இந்தியப் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக இருக்கும் தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிப்பது ஏன்? தமிழ்நாடு என்றால் பா.ஜ.க.விற்குப் பிடிக்கவில்லையா? பா.ஜ.க.விற்கு வாக்களிக்காத மக்கள் வாழும் மாநிலம் என்று நிதி கொடுக்க மறுக்கிறார்கள். ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு நான் சொல்வதெல்லாம்... நீங்கள் நிதியைக் கொடுக்காமல் இருக்கலாம்... நாங்கள் நீதியை அடையாமல் விடமாட்டோம்! நீங்கள் வேண்டும் என்றால் வஞ்சிப்பவர்களாக இருக்கலாம்... ஆனால், நாங்கள் வாழ வைப்பவர்கள்!

**தமிழ்நாடு குறித்து கெட்ட எண்ணத்துடன் பேசிவரும் ஆளுநர் ஆர்.என்.ரவி!**

ஒரு ஆளுநர்... ஆளுநராக நீங்கள் அனுப்பினீர்களே! ஆர்.என்.ரவி... தமிழ்நாட்டை - தமிழ் முன்னோர்களை - தமிழ் மொழியை அவமானப்படுத்துவதையே வழக்கமாக வைத்துக் கொண்டு செயல்படுகிறார். ஏதேதோ புது ஃபிளாசபியை அவர் எடுத்து விடுகிறார்! கவுண்டமணி காமெடி ஒன்று வருமே... "அவர் சொல்றது இங்க புரியாது... வீட்டுக்குப் போனாதான் புரியும்" என்று... அப்படிப்பட்ட கருத்துகளைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்..! அந்த ஆராய்ச்சிக்குள் நான் செல்ல விரும்பவில்லை. ஆனால், தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் வகையில், தமிழ்நாடு குறித்து தவறான எண்ணங்களை கெட்ட உள்நோக்கத்துடன் அவர் பேசி வருகிறார்.

தமிழ்நாட்டில் இருந்து நிறைய தொழில் நிறுவனங்கள் வெளி மாநிலத்திற்குச் செல்கிறார்கள் என்று எந்த ஆதாரத்துடன் பேசுகிறார்? அவ்வாறு செல்ல வேண்டும் என்பதுதான் அவரின் கெட்ட எண்ணமாக இருக்கிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையே பாராட்டுகிறது. அதனால், ஆளுநர் ரவியின் பாராட்டு நமக்குத் தேவையில்லை. ஒரு மேடையில் பெண்களுக்குப் பாதுகாப்பான நகரமாக சென்னை இல்லை என்று சொல்கிறார். இன்னொரு மேடையில், பாதுகாப்பான நகரம் என்று சொல்கிறார். இவ்வாறு மாற்றி மாற்றிப் பேசுகிறார்!

## ஒன்றிய பா.ஜ.க. அரசு நிதியைக் கொடுக்காமல் இருக்கலாம்! நாங்கள் நீதியை அடையாமல் விடமாட்டோம்!

**தவறான எண்ணத்துடன் பேசும் ஆளுநரின் கூற்றை மறுக்கும் ஒன்றிய அமைச்சர்!**

**பாதுகாப்பில்லாத மாநிலம் என்று ஆளுநர் சொன்னதை, இரண்டு நாட்களுக்கு முன்ன சென்னைக்கு வந்த ஒன்றிய அமைச்சர் ஜோதிர் ஆதித்ய சிந்தியா அவர்களே மறுத்துவிட்டார். ஆங்கிலப் பத்திரிகைகளிலே, தமிழ்ப் பத்திரிகையிலே, தொலைக்காட்சிகளிலே அந்தச் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.**

**சென்னையில் ஒரு வர்த்தக நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், "சென்னை மாநகரம் இந்தியாவிற்கே முன்னோடியாக திகழ்கிறது" என்று பாராட்டி இருக்கிறார். "சென்னையில் இருக்கும் ஐ.டி. நிறுவனங்கள் 2 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் ஈட்டுகின்றன. மோட்டார்வாகன உற்பத்தியில் திருப்பெரும்புதூர், நாட்டிலேயே 30 விழுக்காடு அளவிற்குப் பங்கு செலுத்துகிறது. சென்னைதான் உலகின் புதிய டெட்ராய்டு நகரமாக உருவெடுத்திருக்கிறது. ஆண்டுக்கு 50 ஆயிரம் திறமைமிக்க பொறியாளர்களை உருவாக்குகிறது. சாலைகளும், மெட்ரோ ரயிலும் சிறப்பாக இருக்கிறது. நகர்ப்புற வளர்ச்சியில் இந்தியாவிற்கே சென்னைதான் ரோல்மாடல்". இதையெல்லாம் சொன்னவர் பா.ஜ.க.வைச் சேர்ந்த ஒன்றிய அமைச்சர் ஜோதிர் ஆதித்ய சிந்தியா.**

ஆனால், இங்கு ஆளுநராக இருக்கும் ரவி, மட்டமாகப் பேசுகிறார்! அவ்வாறு என்றால், அவரது எண்ணம் கெட்டதாக இருக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறை அவைக்கு வந்து மாநில அரசு தயாரித்துத் தரும் அறிக்கையைப் படிக்க வேண்டியதுதான் ஆளுநருக்கு இருக்கும் ஒரே வேலை! அதைக் கூடச் செய்யாமல், முரண்டு பிடிக்கிறார். மூன்று நாட்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி அவர்களே, ஆளுநர் செய்கையைக் கண்டித்துவிட்டார்.

**ஆளுநர்கள் உரையாற்றுவது குறித்து - பிரதமரின் அழுத்தம் திருத்தமான கருத்து!**

"ஒன்றிய அரசு தயாரித்து வழங்கிய உரையை குடியரசுத் தலைவர் அவர்கள் இந்த அவையில் வாசித்தார். அதேபோன்று, மாநில சட்டமன்றங்களில் அந்தந்த மாநில அரசுகள் வழங்கும் உரையை ஆளுநர்கள் வாசிப்பதும் நாட்டின் மரபு. குஜராத்தில் நான் முதலமைச்சராக இருந்த போது எங்கள் அரசு தயாரித்துக் கொடுத்த உரையைக் காங்கிரஸ் ஆளுநர்கள் வாசித்தார்கள்" என்று பிரதமர் அவர்கள் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டார். மாநில அரசுக்குக் கட்டுப்பட்டு ஆளுநர் செயல்பட வேண்டும் என்கிற உண்மையை பிரதமர் மோடி அவர்களே ஒப்புக்கொண்டிருக்கும் நிலையில், இனி என்ன சொல்லப் போகிறார் ஆளுநர் ரவி?

**என்னைப் பொறுத்தவரை, ஆளுநராக ஆர்.என்.ரவியே இருக்க வேண்டும்!**

நீதிமன்றத்தில் இருக்கிறது அந்தப் பிரச்சினையெல்லாம். ஒரு வாரத்துக்குள் தீர்ப்பு வரும். என்னைக் கேட்டால் அவரேதான் தொடர்ந்து இருக்க வேண்டும். அவர் இருந்தால்தான் நமக்கு வேகம் வருகிறது.

நான் பல நேரங்களில் சொல்லியிருக்கிறேன். 2026 வரை மட்டுமல்ல, தி.மு.க. ஆட்சிக்காலமெல்லாம் அவர்தான் இருக்க வேண்டும். அப்போதுதான் நமக்கு வசதி. அவரே நமக்குப் பெரிய பிரசாரத்தை நடத்திக்கொண்டு இருக்கிறார். அடுத்து இன்னொருவர் இருக்கிறார். தமிழக பா.ஜக. தலைவர் அண்ணாமலை, அவரும் தொடர்ந்து இருக்க வேண்டும். இவர்கள் இரண்டு பேர் இருந்தால் போதும். நாம் பிரச்சாரம் செய்யத் தேவையில்லை. அவர்களே பிரச்சாரம் செய்து நமது ஆட்சியை மீண்டும் மீண்டும் கொண்டு வந்து தமிழ்நாட்டில் உட்கார வைத்துவிடுவார்கள்.

**யாராக இருந்தாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்க முடியாது!**

நான் கேட்பதெல்லாம், இவ்வளவு நடந்த பிறகும், பிரதமரே சொல்லியதற்குப் பிறகும், இனியாவது ரவி திருந்த வேண்டும். பிரதமர் அவர்களைப் பார்த்து நான் கேட்க விரும்புவது... நீங்கள் குஜராத் முதலமைச்சராக இருந்தபோது என்ன கேட்டீர்களோ, அதைத்தான் பிரதமராக இருக்கும் உங்களிடம் நான் கேட்கிறேன்! ஆளுநர் இல்லை, யாராக இருந்தாலும் தமிழ்நாட்டு வளர்ச்சியைத் தடுக்க முடியாது. தமிழ்நாட்டில் நாம் செய்து வரும் வளர்ச்சிப் பணிகளை எந்தக் கொம்பனாக இருந்தாலும் தடுக்க முடியாது. அது அவர்களுக்கும் தெரியும். அதனால்தான் குழப்பம் ஏற்படுத்த முடியுமா என்று பார்க்கிறார்கள். தமிழ்நாட்டில் ஏதாவது புதிய பிரச்சினையைக் கிளப்பி கலவரம் செய்யலாமா? வன்முறைக்கு வழி அமைக்கலாமா? என்று சிலர் செயல்படுகிறார்கள்.

பல்வேறு மதங்கள் - சாதிகள் - பழக்க வழக்கங்கள் கொண்ட மக்களாக இருந்தாலும், தமிழர்கள் என்ற உணர்வுடன் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள். அவரவர் கடவுள் - அவரவர் நம்பிக்கை - அவரவர் விருப்பம் என்று அமைதியாக வாழ்ந்து வருகிறார்கள். இங்கு, அனைத்துச் சமய விழாக்களும் தினமும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. லட்சக்கணக்கான மக்கள் கூடுகிறார்கள். அமைதியாக வீட்டுக்குத் திரும்பிச் செல்கிறார்கள். ஆன்மீகம் வேறு; அரசியல் வேறு என்று பகுத்தறிந்து பார்க்கும் மக்கள் வாழும் மாநிலம், நம்முடைய தமிழ்நாடு. ஆன்மீகத்தை தங்களின் அரசியலுக்குப் பயன்படுத்தும் தீய சக்திகளை நாம் எப்போதுமே ஏற்றுக் கொள்ள மாட்டோம், மக்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

**வள்ளுவத்தையும், வள்ளலாரையும் வாழ்வியல் அறநெறியாகக் கொண்டது தமிழ்நாடு!**

அதேபோன்று, பிற மதத்தினர் உணர்வுகளையும் மதிப்பவர்கள்தான் நம்முடைய மக்கள். இதை, மக்கள் அளிக்கும் பேட்டிகளிலேயே பார்த்திருப்பீர்கள். இங்கு பக்தி என்றைக்குமே மதவெறியாக மாறாது. அதனால்தான், பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் போன்று வன்முறைக் காடாக இல்லாமல், அமைதிப் பூங்காவாகத் தமிழ்நாடு இருக்கிறது. இந்த அமைதியைச் சில சக்திகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் சீர்குலைக்கப் பார்க்கிறார்கள். நல்லிணக்கமும், நட்புணர்வும்தான் - வள்ளுவத்தையும், வள்ளலாரையும் வாழ்வியல் அறநெறியாகக் கொண்டு வாழும் தமிழ்நாட்டின் அடையாளம்! அந்த நல்லிணக்கத்தைக் கெடுப்பது மூலமாக தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்க நினைப்பவர்கள் எண்ணம் ஈடேறாது!

**திருந்துங்கள்! இல்லை என்றால் திருத்தப்படுவீர்கள்!**

தமிழ்நாட்டிற்கு நியாயமாக வர வேண்டிய நிதியைக் கொடுக்க மாட்டீர்கள். பேரிடர் நேரத்தில் கூட உதவி செய்ய மாட்டீர்கள். ஆனால், எங்கள் மாநிலத்தின் அமைதியை மட்டும் கெடுக்க நினைப்பீர்களா? நீங்கள் ஏமாந்துதான் போவீர்கள்! திருந்துங்கள்; இல்லை என்றால் திருத்தப்படுவீர்கள் என்று எச்சரிக்கிறேன். ஒன்றிய அரசு தன்னுடைய மனப்பான்மையை மாற்றிக் கொள்ளவில்லை என்றால், மக்கள் மன்றத்தில் நாளுக்கு நாள் மரியாதையை நீங்கள் இழப்பீர்கள்.

**கும்பமேளாவில் ஜே.சி.பி.யைக் கொண்டு உடல்களை அகற்றிய உ.பி. அரசு!**

கடந்த வாரத்தில் வருந்தத்தக்க இரு சம்பவங்கள் நடந்திருக்கின்றன. உத்தரப்பிரதேச மாநிலத்தில் கும்பமேளாவிற்குச் சென்ற பக்தர்களுக்குச் சரியான பாதுகாப்பு ஏற்பாடு செய்யாததால் நெரிசலில் சிக்கி, 48 பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள். ஆனால் 30 பேர்தான் என்று அங்கிருக்கும் பா.ஜ.க. அரசு சொல்கிறது. 48 பேர் என்று ஊடகங்கள் சொல்கின்றன. இன்னும் கூடுதலாக இருக்கும் என்று அந்த மாநிலத் தலைவர்கள் சொல்கிறார்கள். ஜே.சி.பி. இயந்திரத்தை வைத்து உடல்களை அகற்றியதாக சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் அவர்கள் குற்றம் சாட்டி இருக்கிறார். அதைப் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவற்குக் கூட அனுமதிக்கவில்லை. கும்பமேளாவிற்கு வாருங்கள் என்று பக்தர்களை அழைத்தீர்களே! அவர்களுக்குப் பாதுகாப்பு தந்திருக்க வேண்டியது பா.ஜ.க. அரசின் கடமை இல்லையா? உங்கள் மதவாத அரசியல் ஏன் மவுனம் ஆகிவிட்டது?

அடுத்த மிகப்பெரிய கொடூரச் சம்பவம், அமெரிக்காவில் இருந்து 104 இந்தியர்கள் கையிலும், காலிலும் விலங்கு மாட்டி இராணுவ விமானத்தில் திரும்ப அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள். இல் அவர்களின் பேட்டி கண்ணீர் வரவைப்பதாக இருக்கிறது. இது தொடர்பாக, அமெரிக்க அரசாங்கத்திடம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்கள், நடந்ததை நியாயப்படுத்தும் வகையில் விளக்கம் அளிக்கிறார். இதுதான் இந்தியர்களைக் காப்பாற்றும் லட்சணமா? தன்னுடைய உலகப் பயணங்கள் மூலமாக இந்தியாவின் மதிப்பை உயர்த்தி விட்டதாக மார் தட்டிக் கொள்ளும் விஷ்வகுரு பிரதமர் மோடிக்கு, 104 இந்தியர்கள் நடத்தப்பட்ட விதம் அவமானமாகத் தெரியவில்லையா? அமெரிக்க அதிபர் உங்கள் நண்பர்தானே? அவருக்காக அமெரிக்கா சென்று பிரச்சாரம் எல்லாம் செய்தீர்களே? அவரிடம் இந்தியர்கள் குறித்துப் பேசியிருக்க வேண்டாமா? உங்கள் இந்திய தேசிய அரசியல் மவுனம் ஆனதற்கு என்ன காரணம்? ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைப்பது தவிர, வேறு எந்த நோக்கமும் ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு இல்லை என்று இதன் மூலம் தெரிகிறதா? இல்லையா?

**நாங்கள்தான் ஜனநாயகத்தின் வேர்! மறந்துவிடாதீர்கள்!**

ஒன்றிய ஆட்சியாளர்களே... வஞ்சிப்பது உங்கள் வழக்கம்... வாழ வைப்பதும்... வளர்த்தெடுப்பதும் எங்களின் பழக்கம்! உங்களைப் பொருத்த வரைக்கும், தொட்டால் தீட்டு, பட்டால் தீட்டு போன்று 'தமிழ்நாடு' என்று சொன்னாலே தீட்டாகிவிடுமா? இயற்கைப் பேரிடர் நிதியைக்கூட தர முடியாத அளவிற்கு, உங்கள் இதயம் இரும்பாகி விட்டதா? நீங்கள் மேலே இருக்கிறீர்கள்... நாங்கள் கீழே இருக்கிறோம் என்று நினைத்து, ஆணவத்தில் ஆடாதீர்கள்... கீழே இருக்கும் வேர் பலமாக இருந்தால்தான், மேலே மரம் வலுவாக வளர முடியும்! நாங்கள்தான் ஜனநாயகத்தின் வேர்! மறந்துவிடாதீர்கள்!

**அண்ணா அந்நாளில் கூறிய கூற்று!**

இன்னும் சொல்கிறேன்... "என்னால் ஆனதை நான் செய்துவிட்டேன். இனி டெல்லி தன்னால் ஆனதைப் பார்த்துக் கொள்ளட்டும்" என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். அண்ணாவின் தம்பிகளான நாங்கள் - கலைஞரால் வளர்க்கப்பட்ட நாங்கள் சொல்கிறோம்... உங்களால் முடிந்தவரைக்கும் தமிழ்நாட்டை வஞ்சியுங்கள். எங்களால் முடிந்தவரைக்கும் உங்கள் தடைகளைக் கடந்து தமிழ்நாட்டை வளர்த்தெடுப்போம்!

**தி.மு.க. என்றென்றும் - மாநில உரிமைகளுக்கான போராளி!**

ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கும் - கடந்த காலத்தில் கொத்தடிமைத் தனத்தால் தமிழ்நாட்டின் அனைத்து உரிமைகளையும் அடகு வைத்த அ.தி.மு.க.விற்கும் ஒட்டுமொத்தமாகப் பாடம் புகட்டும் தேர்தலாக 2026 சட்டமன்றத் தேர்தல் அமைய இருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் 100 விழுக்காடு வெற்றியைப் பெற்றதைப் போன்று, சட்டமன்றத் தேர்தலிலும் முழு வெற்றியைப் பெறுவோம்! ஏழாவது முறையும் ஆட்சியை அமைத்து ஏற்றம் காண்போம்! தி.மு.க. என்றென்றும் மாநில உரிமைகளுக்கான போராளி! இன்றைக்கு நாங்கள் முன்மொழிவதை, நாளைக்கு இந்தியாவே வழிமொழியும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.